# ஆசிரை
# கிறிஸ்துவுக்கு புகழ்

**அன்பின் வாசக நெஞ்சங்களே!**

பாஸ்கா மறை நிகழ்ச்சிகளாகிய இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்னும் நிகழ்வுகளை ஆழமாக சிந்திக்கும் காலம் இது. இம்மாதத்தில் கூடுதலாக சிலுவைப்பாதைத் தியானம், ஒறுத்தல் முயற்சிகள், தியானங்கள் போன்றவை எல்லாம் இந்த மறை நிகழ்ச்சியை மையப் படுத்தியதாகவே இருக்கும். “உங்கள் உடைகளை அல்ல உள்ளங்களை கிழித்துக் கொள்ளுங்கள் என்றும், இறைவாக்கினர் எசாயா அறைகூவல் விடுக்கின்றார். “மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்” என்ற இறைவாக்கும் தூய மாற்கு நற்செய்தி ஊடாக கொடுக்கப்பட்டு, விபூதி புதன் எமது நெற்றிகளில் சாம்பல் பூசி அழைப்பு விடுக்கப்பட்டது. மேலும் இக்காலம் அருளின், இரக்கத்தின், அன்பின் காலமாக இருக்கின்றது. ஒருவரை ஒருவர் மன்னித்து அன்பு செய்யவும், ஒருவரை ஒருவர் விட்டுக்கொடுத்து ஏற்றுகொண்டு வாழவும். இக்காலம் அழைப்பு விடுகிறது. அருளின் காலமாகிய இந்த தவக்காலத்தில் மீண்டும் மனம்மாறி புதிய வாழ்வு வாழ வேண்டுமென்று அழைப்பு விடுக்கிறது. இயேசுவின் பணிவாழ்விலே, எத்தனையோ சோதனைகள், வேதனைகள், துன்பங்கள் தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தது. ஆனால் அவற்றையெல்லாம் இறைவனின் வல்லமையால் முறியடித்து, ஏற்றுக்கொண்டு இறை சித்தத்தை ஏற்றுக்கொண்டார். அந்த துன்பக்கிண்ணம் என்னைவிட்டு அகல முடியுமானால் அகலட்டும், ஆனால் அதுவும் என் எண்ணமல்ல இறைவனின் சித்தமென்றால் அதையும் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாகின்றேன் என்று இறைவனின் திட்டத்திற்கு தன்னை முழுமையாக கையளித்தார். இறுதிவரைக்கும் தான் எடுத்த இலட்சியப் பாதையிலே நின்று விலகாமல் உறுதியாக நின்று உயிர்ப்பின் மகிமையை பெற்றுக் கொண்டார். இதுதான் உண்மையின் உயிர்ப்பின் வாழ்வு. அதாவது துன்பத்தை ஏற்று அந்தத் துன்பத்தினுாடாக வாழ்வு உண்டு என்று நம்பி இறைவனில் விசுவாசம் வைத்து புதிய வாழ்விற்கு உயிர்த்தெழுதல் புதிய வாழ்வின் ஆரம்பமாகும். நாமும் இக்காலத்தை பயன்படுத்திக் கொள்வோம். கூடுதலாக இல்லத்தில் துன்பங்கள், துயரங்கள், சோதனைகள் அதிகமாக எமக்கு வரக்கூடும். உடல் நோய்கள், குடும்பத்தின் சிக்கல்கள், பதவி, பட்டம், பணம் என்பன சோதனைகளாக எமக்கு வரக்கூடியவை. அவை எமது உயிர்ப்பின் சாட்சிய வாழ்விற்கு தடைக்கற்களாக இருக்கக்கூடியவை. ஆனால் இறைஅருளோடு, இறை நம்பிக்கையோடு, இறை வல்லமையோடு இவற்றை நாம் வெல்ல வேண்டும். எவ்வாறு இயேசு தனது மூன்று சோதனைகளையும் வென்று தனது இலட்சியப் பாதையில் உறுதியாக நின்று உயிர்ப்பின் மகிமையை அடைந்தாரோ, அதேபோல நாம் ஒவ்வொருவரும் இயேசுவின் உயிர்ப்பில் பங்குகொள்ள நாளாந்தம் வரும் சோதனைகள், துன்பங்கள், துயரங்கள் என்பவற்றை ஏற்று இறை சித்தத்தை நிறைவேற்றுவோமாக.

**அன்புடன்,**
**அருட்பணி யூட் நிக்ஸன்**
*Parish Priest Our Lady of Deliverance Tamil Catholic Mission*